# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


மறைநூலில் சொல்லியிருப்பது இதுவே: “வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது; உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது.” இதுவே நீங்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும் என நாங்கள் பறைசாற்றும் செய்தியாகும். ஏனெனில், ‘இயேசு ஆண்டவர்’ என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர்; வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். ஏனெனில், “அவர்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்” என்பது மறைநூல் கூற்று . ( உரோ 10:8-11)



# திருத்தந்தையின் தவக்காலச் செய்தி

வத்திக்கான்: விசுவாசிகள் ஒவ்வொருவரும் எதிர்நோக்கில் ஒன்றிணைந்து நடைபோடவும், நம் வாழ்வை மாற்றியமைக்க கடவுள் விடுக்கும் அழைப்புக்கு செவிமடுக்க இந்த தவக்காலம் தரும் வாய்ப்பை நாம் ஏற்கவும் தயாராக இருப்போம் என தன் தவக்காலச் செய்தியில் எழுதியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மார்ச் மாதம் 5ஆம் தேதி துவங்க உள்ள தவக்காலத்திற்கென செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற யூபிலி ஆண்டின் மையக்கருத்தை ஒட்டி தன் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்.

பயணத்தின் முக்கியத்துவம், ஒன்றிணைந்து பயணித்தல், எதிர்நோக்குடன் பயணித்தல் என்ற மூன்று கோணங்களில் தன் கருத்துக்களை இத்தவக்காலச் செய்தியில் பகிர்ந்துள்ளார் திருத்தந்தை.

நம் விசுவாச வாழ்வு என்பது மனமாற்றத்தின் பயணம் எனக்கூறும் திருத்தந்தை, இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட பூமியை நோக்கி பயணம் செய்ததுபோல் நம் வாழ்வும் இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயணம் தொடர்ந்து நம் மனமாற்றத்திற்கு அழைப்பு விடுத்துக் கொண்டே இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒன்றிணைந்த பயணத்திற்கான அழைப்பு என்பது ஒன்றித்த நடைபோடுதலுக்கான அழைப்பு என எடுத்துரைக்கும் திருத்தந்தை, நாம் நம்மைப் பற்றியே எப்போதும் சிந்திப்பவர்களாக இராமல் இறைவனை நோக்கியும், நம் சகோதர சகோதரிகளை நோக்கியும் நடைபோடுபவர்களாக இருக்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் நம் பயணத்தில் எவரும் விடுபட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடாது, ஏனெனில் நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்ற வகையில் பொது மாண்பை கொண்டுள்ளவர்கள் என மேலும் தன் செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

மீட்பு மற்றும் முடிவற்ற வாழ்வு குறித்த இறை வாக்குறுதியில் நம்பிக்கைக் கொண்டு நடைபோடுவோம் என்ற அழைப்பை விடுக்கும் திருத்தந்தை, இறை இரக்கத்தில் நாம் உண்மையில் நம்பிக்கைக் கொண்டுள்ளோமா என்பது குறித்து சிந்திப்போம் எனவும் கேட்டுள்ளார்.

அவர் தொடரந்து, "இந்த வாழ்க்கையில் நாம் அனைவரும் திருப்பயணிகள் என்பதை உணர்ந்ததில் இருந்து "மனமாற்றத்திற்கான முதல் அழைப்பு" வருகிறது என்று அவர் கூறினார். இந்த உண்மையானது நம் வாழ்க்கை எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை ஆழ்ந்து சிந்திக்க நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறோம் என்று மேலும் கூறினார். ‘நான் உண்மையிலேயே ஒரு பயணத்தில் இருக்கிறேனா, அல்லது நான் ஓரிடத்திலேயே உள்ளேனா? பயம் மற்றும் நம்பிக்கையின்மையால் அசையாமல் இருக்கிறேனா அல்லது எனது நல மண்டலத்திலிருந்து வெளியேறத் தயங்குகிறேனா? பாவம் என் கண்ணியத்தை இழிவுபடுத்தும் சூழ்நிலைகளை விட்டுவிட நான் வழிகளைத் தேடுகிறேனா? சிந்திக்க வேண்டும்.

ஒருவரின் வாழ்க்கையை புலம்பெயர்ந்தோர் அல்லது அகதிகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு நல்ல நோன்புப் பயிற்சி மற்றும் மனசாட்சியைப் பரிசோதிப்பது என்று பிரான்சிஸ் கூறினார், "அவர்களுடைய அனுபவங்களுக்கு எவ்வாறு அனுதாபம் காட்டுவது என்பதைக் கற்றுக்கொள்வதாலும், இவ்வழியில் கடவுள் நம்மிடம் என்ன கேட்கிறார் என்பதைக் கண்டு பிடிப்பதாலும் நாம் தந்தையின் வீட்டிற்குச் செல்லும் திருப்பயணத்தில் சிறப்பாக முன்னேற முடியும்"

"இந்த தவக்காலம், நம் வாழ்வில், நம் குடும்பங்களில், நாம் வேலை செய்யும் இடங்களில், நேரத்தை செலவிடும் இடங்களில், நாம் மற்றவர்களுடன் ஒன்றாக நடக்கவும், அவர்கள் சொல்வதைக் கேட்கவும், சுய-உள்வாங்குவதற்கான சோதனையை எதிர்க்கவும், நம் சொந்த தேவைகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கவும் முடியுமா என்பதை ஆராயும்படி கடவுள் நம்மைக் கேட்கிறார்," என்று அவர் கூறினார்.

தமிழாக்கம்: ஆர்.கே.-

# ஈப்போ, புனித லூர்து அன்னை திருவிழா சிறப்புற கொண்டாடப்பட்டது

ஈப்போ, சிலிபின் சாலையில் வீற்றிருக்கும் புனித லூர்து அன்னை தேவாலயத்தின் ஆண்டு திருவிழா கடந்த 15.2.2025 அன்று, அதன் 120ம் ஆண்டு திருவிழாவாக ‘எதிர் நோக்கின் திருப்பயணிகள்’ எனும் கருப்பொருளில் கொண்டாடப்பட்டது.

2000 க்கும் மேற்பட்ட பங்கு மக்களும் திருப்பயணிகளும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர். பங்கு திருவிழாவை முன்னிட்டு ஒன்பது நாள்கள் நவநாள் இறைவேண்டல்கள், செபமாலை முதலியன திருப்பலிகளோடு நிறைவேற்றப்பட்டன.

ஒவ்வொரு நவநாள் திருப்பலியிலும், எதிர் நோக்கின் திருப்பயணிகளான நமக்கு துணை கருத்தாக கடவுளின் வாக்குறுதியில் எதிர்நோக்கு, மரியாளின் பரிந்துரையில் எதிர்நோக்கு, குணமடைவதிலும் சீர் பெறுவதிலும் எதிர்நோக்கு, துன்புறுகையில் எதிர்நோக்கு, உயிர்த்தெழுதலில் எதிர்நோக்கு, நம்பிக்கையாளர்களின் சமூகத்தில் எதிர்நோக்கு, இறை வேண்டல்-நம்பிக்கையில் எதிர்நோக்கு மற்றும் அமல



உற்பவத்தில் எதிர்நோக்கு ஆகிய துணை கருப்பொருள்களில் மறையுறைகள் நிகழ்த்தப்பட்டன. குணமளிப்பு திருப் பலியும் நடைபெற்றது.

திருப்பலிகள் யாவையும் கும்பகோணம் மறை மாவட்டத்தை சேர்ந்த மேதகு ஆயர் ஜீவானந்தன், அருட்பணியாளர்கள் தேவதாஸ், ஆல்பர்ட் அவர்களால் கொண்டாடப்பட்டது. திருவிழா நாளன்று, தூய நற்கருணை பவனியிலும், லூர்து அன்னை சுரூப அலங்கரிப்பு பவனியிலும் இறைமக்கள் திரளாகப் பங்குப்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பங்குத்தந்தை அருட்பணி ராபர்ட் டேனியல், துணை தந்தை அருட்பணி ஜார்ஜ் மற்றும் திருத்தொண்டர் சந்தன சாமி யாவரும் திருப்பலிகளில் பங்கேற்ற அனைத்து இறைமக்களுக்கும் திருவிழா வாழ்த்தையும் நன்றியையும் கூறிக் கொண்டனர். மேலும் பங்கு குருவானவர் பங்கின் அனைத்து பணிக்குழுக்களுக்கும் அவர்களின் சேவை நிமித்தம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

குளோரியா இராசையா மைக்கல்

# கிள்ளானில், நம்பிக்கை, குணப்படுத்துதல் மற்றும் எதிர்நோக்கின் கொண்டாட்டம்

கிள்ளான்: புனித லூர்து அன்னை பங்கின் வருடாந்திர திருவிழா, கடந்த பிப்ரவரி 7ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை தினசரி நவநாள் திருப்பலியுடன், சிறப்பாக கொண்டாடப்பட்டது. கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் பங்குகளிலிருந்தும் இதர ஊர்களில் இருந்தும் திரளான மக்கள் திருப்பலிகளில் கலந்து கொண்டாடினர். இவ்வாண்டு திருவிழா பங்கு தந்தை அருள்பணி கிரிகோரி சான் மற்றும் துணை பங்குத்தந்தை ஞான செல்வம் அவர்களின் கொடியேற்றத்துடன் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.



மேலும், இவ்வாண்டு திருவிழாவானது, யூபிலி 2025-ன் கருபொருளான எதிர் நோக்கின் திருப்பயணிகள்' எனும் முதன்மை கருப்பொருளில் - "மனிதரால் இது இயலாது. ஆனால், கடவுளால் எல்லாம் இயலும்" (மத்.19-26) என்பதன் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் ஆகியவற்றையொட்டி மறையுரைகள் பகிரப்பட்டன.

ஒன்பது நாள் நவநாள் திருப்பலிகளை மலாக்கா-ஜொகூர், பினாங்கு மற்றும் கோலாலம்பூர் உயர் மறைமாவட்டம் ஆகிய பகுதிகளில் இருந்து அழைக்கப்பட்ட அருள்பணியாளர்கள் தலைமையேற்று கொண்டாடினர்.

லூர்து அன்னையின் திருவிழாவின் ஒரு



நிகழ்வாக, உலக நோயாளிகளுக்கான தினம் சிறப்பிக்கப்பட்டது. அன்று தொடக்கமாக, நோயாளிகளுக்கான நோயிற் பூசுதல் திருச்சடங்கோடு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. கிள்ளான் பள்ளத்தாக்கு மற்றும் மற்ற மாநிலங்களில் இருந்து 1,500க்கும் மேற்பட்ட திருப்பயணிகள், லூர்து அன்னையின் பரிந்துரையின் மூலம் குணமடைய மன்றாடினார். புத்ரி கார்மல் சகோதரிகளால் குணப்படுத்தும் பேரணி நடத்தப்பட்டது, பல திருப்பயணிகள் உடல் மற்றும் ஆன்மீக குணமடைந்தாக சாட்சியமளித்தனர். லூர்து குளியலின் வழியாக அமைதி, புதுப்பித்தல் மற்றும் கடவுளுடனான தொடர்பை ஆழப்படுத்தினர்.

பிப்ரவரி 15 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு பன்மொழிகளில், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் திருப்பலி கொண்டாடப்பட்டது. அவரோடு சேர்ந்து அருள்பணியாளர்கள் கிரிகோரி சான், ஞான செல்வம், சைமன் அக்போ, மைக்கேல் ஆகியோரும் கொண்டாடினார்கள்.

திருப்பலிக்குப் பிறகு ஏறக்குறைய, 2000 திருப்பயணிகள் கிள்ளான், தெங்கு கிளானா சாலையில் வழியாக நற்கருணை மற்றும் அன்னை மரியா சுரூபத்துடன் மெழுகுவர்த்தி ஏந்திய திருபவனியில் பங்கேற்றனர்.

நேசா தேவசகாயம்.

**தவக்கால சிநதனைக்கு!**

**மன்னிப்பதும் மன்னிப்புக் கேட்பதும், வாழ்க்கையில் நம்மை எவ்விதத்திலும் சிறுமைபடுத்தப் போவதில்லை என்பதை உணர்ந்திடுவோம். இன்னும் எஞ்சியிருப்பது எத்தனை ஆண்டுகள், மாதங்கள், வாரங்கள், நாட்கள், மணித்துளிகள் என்பது நமக்கே தெரியாது.**

# என் அத்தை ஜாக்கியோடு நம்பிக்கை மற்றும் உத்வேகத்தின் பயணம் (சிறப்பு கட்டுரை, பகுதி 2)

அவரது திருமணம் மற்றும் ஒரு புதிய திரு அவைக்கு இடம்பெயர்ந்த பிறகும் - புனித குடும்பத்தின் திரு அவை (காஜாங்) - அவர் கற்பிப்பதில் தனது ஆர்வத்தைத் தொடர்ந்தார். அவர் தமிழ் அருங்கொடைக் குழுவில் தீவிரமாக ஈடுபட்டார், பாராட்டு மற்றும் வழிபாடு மற்றும் இறைவார்த்தைப் பகிர்வு ஆகியவற்றில் பங்கேற்றார். அவளது அடிப்படை இறையியல் படிப்பை (தமிழ் மொழி) முடிக்க வேண்டும் என்பதே அவளது மிகப்பெரிய அபிலாஷையாக இருந்தது, மேலும் அவள் படிப்பில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தாள், எண்ணற்ற மணிநேரங்களை இறையியல் புத்தகங்கள் மற்றும் இறைவார்த்தையைப் படிப்பதற்காக அர்ப்பணித்தாள். அவள் ஒவ்வொரு பணியையும் விடாமுயற்சியுடன் அணுகினாள், சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்புடன், எப்பொழுதும் அவளது சிறந்ததையே விரும்பினாள். ஒரு காலில் ஏற்பட்ட காயம் அவளது இயக்கத்திற்கு இடையூறாக இருந்தபோதும், அவள் அறிவைப் பின்தொடர்வதில் உறுதியாக இருந்தாள். தவறவிட்ட வகுப்புகள் குறித்து அருட்சகோதரி ரீட்டா சவரிண்ணனை அனுகி அவளுடைய காலில் ஏற்பட்ட காயம் அவளுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு தடையாக இல்லை. அவரது இறையியல் படிப்பை முடிப்பதற்கான ஒரு தேவையாக, என் அத்தை வரவிருக்கும் ஒவ்வொரு முகாமையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

துரதிர்ஷ்டவசமாக, இந்த முகாமின் முடிவுக்கு சற்று முன்பு, அக்டோபர் 12, 2024 அன்று, அவர் மயக்கமடைந்தார் என்ற இதயத்தை உடைக்கும் செய்தி எங்களுக்கு கிடைத்தது. நாங்கள் அவளைக் காண விரைந்தபோது, அவள் இறந்துவிட்டாள் என்று எங்களுக்குத் தெரிந்தது. அது எங்கள் உணர்வை ஆழமாக பாதித்தது - என் அத்தையை இழந்தது என் குழந்தைப் பருவத்தை இழந்தது போல் உணர்ந்தேன். துக்கத்தை செயலாக்குவது கடினமாக உள்ளது, ஆனாலும் நான் என் நம்பிக்கையில் ஒட்டிக்கொள்கிறேன், இந்த இதய வலியில் ஒரு ஆன்மீக நோக்கம் இருப்பதாக நான் நம்புகிறேன், அது இன்னும் எனக்கு வெளிப்படுத்தப்படவில்லை. இதைத்தான் என் அத்தை நான் பிடித்துக் கொள்ள விரும்பியிருப்பார் என்று நம்புகிறேன்.

பொஃலிசியா எட்வின் அந்தோணி

# பெஸ்தாரி ஜெயா, பண்டார் ஸ்ரீ கொல்ஃபீல்சில் புதிய சிற்றாலயம்

பெஸ்தாரி ஜெயா: பண்டார் ஸ்ரீ கொல்ஃபீல்சில் புதியதொரு சிற்றாலயம் எழுப்பும் திட்டம் முன்மொழியப்பட்ட கட்டுமானப் பணி, கடந்த ஆண்டு தொடக்கத்தில் மாற்றியமைக்கப்பட்டது. இன்னும் தீர்க்கப்பட வேண்டிய பல சிக்கல்களால் உள்ளன. இவை வரும் மாதங்களில் தீர்க்கப்படும் என பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

கோலா சிலாங்கூர் சாலையின் அருகில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதியில், பல பத்தாண்டுகளாக இப்போதிருக்கும் புனித அந்தோணியார் சிற்றறாலயத்திற்கு மாற்று சிற்றாலயமாக இந்த புதிய சிற்றாலயம், எழுப்பப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பெஸ்தாரி ஜெயாவில் உள்ள புனித வனத்து சின்னப்பர் பங்கின் பங்குத் தந்தையான அருள்பணி ஜேம்ஸ் கேப்ரியல் அவர்கள் கருத்துரைக்கையில், சனவரி 2025 இல் நடைபெற்ற கட்டிடக் குழு கூட்டத்திற்குப் பிறகு, கட்டிடக் குத்தகையாளருக்கான டெண்டர் ஆவணங்களைத் தயாரிப்பதற்கு மூன்று முதல் நான்கு மாதங்கள் கால அவகாசம் தேவை ஆகும். இதன்படி மே/ஜூன் 2025 க்குள் டெண்டர்



கோரப்படும். இச்சிற்றாலயத்திற்கான கட்டுமானப் பணிகள் 18 மாதங்கள் ஆகும் என எதிர்பார்க் கப்படுகிறது.

800 இருக்கைகள் கொண்ட இச்சிற்றாலயம் ஏறக்குறைய RM7.5 மில்லியன் தொகையில் கட்டப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# சோதனைகள் வெல்வோம் சாதனைக்கு!

இன்று, தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு. திருஅவை இயேசுவின் பாடுகளை மனதில் சிந்தித்து நம்மை மனமாற்றத்திற்கு மீண்டுமாய் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ராயேல் மக்கள் இறைவன் தமக்குச் செய்த உதவிகளை நினைத்து துணை நின்ற கடவுளுக்கு நன்றிக் கடன் செலுத்துவதை எடுத்துரைக்கிறது. அவர்கள் துன்பங்களின் மத்தியிலும், அடிமைகளாக எகிப்தில் வாழ்ந்த போதும் வலிய கரத்தாலும் ஓங்கிய புயத்தாலும் இறைவன் அவர்ளை மீட்டதை நினைத்துக் கண்ணீர் சிந்தி நன்றி செலுத்துகின்றனர்.

இரண்டாம் வாசகத்தில் பவுல் அடிகள், பழைய ஏற்பாட்டில் இறைவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவித்து, பாலும், தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றும், புதிய ஏற்பாட்டு இறைவன் பாவம் என்னும் அடிமைத்தனம் விடுத்து, மக்களை புதிய வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார் என்றும் விவரிக்கின்றார்.

நாம் காலடி எடுத்து வைத்துள்ள இந்த தவக்காலமானது, இறை மனித உறவை புதுப்பிக்கும் காலம். இருகிப்போன இதயங்கள் அன்பில் மீண்டும் துளிர்விக்கும் காலம். ஆணவமும், சுயநலங்களும் களையப்பட்டுப் புதிய வாழ்வுப் பெற அழைக்கப்படும் காலம். நாற்பது நாட்கள் என்ற காலக்கட்டம் விவிலியத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பின்னிப்பிணைந்துள்ளதை நாம் காணலாம். இந்த நாற்பது நாட்களின் முடிவில் கிடைத்த வெற்றி அனுபவங்களை நாமும் பெற்று மகிழ அழைக்கப்படுகிறோம்.

இயேசுவின் நாற்பது நாட்களைப் பற்றிய லூக்காவின் நற்செய்தியில், இயேசு நாற்பது நாள்கள் முழுவதும் சோதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவரது பாலைநில அனுபவத்தின் முடிவில் அலகை நெருங்கி வருகிறான். மூன்று சோதனைகளை இயேசு முறியடிக்கிறார். ஆனால் அது அங்கு முடியவில்லை. அலகை ஏற்ற நேரம் வரை காத்திருந்தது. (லூக்கா 4:13). அலகையினால், சோதிக்கப்படும் போது, சோதனைக்கு அடிபணிந்து, பாறைகளை அப்பமாக மாற்றுவதால் அவரது வயிற்றுப் பசியைப் எளிதாக போக்கியிருக்கலாம். அலகை இயேசுவுக்கு முழுமையான ஆற்றலை வழங்கியது. அவர் அடிபணியவில்லை.

இதை ஒரு பாலைநில சோதனையை, வெறும் சோதனையாகப் பார்க்காமல் நம் உள்ளத்தில் நிகழும் நன்மைக்கும் - தீமைக்கும் எதிரான போராட்டமாகவும் பார்க்க வேண்டும். இந்த போராட்டம் இன்றைய நாளைய, பொழுதோடு முடியப் போவதில்லை. தொடரும். நாம்தான் போராட வேண்டும்.

**தவக்காலம் முதல் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | இ.ச. 26: 4-10 |
| திரு.பாடல் | 91:1-2.10-11.12-13.14-15 |
| 2 வாசகம் | உரோ 10: 8-13 |
| லூக்கா | 4: 1-13 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 4**